# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 01 வியாழக்கிழமை (15-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily ஒளி: 168


# பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில்
# ஓமந்தை வரை படையினர் நகர்வு!

## ஷெல், விமானத் தாக்குதல்களால் மக்கள் காடுகளுக்குள் ஓட்டம்

வவுனியா, மே 15

புலிகளின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் படையினர் நேற்று ஓமந்தை வரை 2 கிலோமீற்றர் தூரம் நகர்ந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் நாள் புலிகளின் சிறிய எதிர்ப்பே இருந்ததால் படையினர் 5 கிலோமீற்றர் தூரம் முன்னேற முடிந்தது என்றும், ஆனால் நேற்று எதிர்ப்பு அதிகமாக இருந்தது என்றும் -- இராணுவப் பேச்சாளர் திஸ்ஸ ஜயதுங்க எம். ரி. வி. தொலைக் காட்சிக்குத் தெரிவித்தார்.

அதே சமயம் சண்டை தொடர்ந்து நடைபெறுவதாகவும் —

கடுமையான ஷெல் தாக்குதல்களினால் ஓமந்தையில் பெரும் அழிவு ஏற்பட்டிருப்பதாகவும் —

படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி ஆயிரக்கணக்கான மக்கள் காடுகளுக்குள் ஓடிக் கொண்டிருப்பதாகவும் லண்டனில் புலிகளின் அறிவிப்பு ஒன்று தெரிவித்தது.

'ஜெய சிகுரா' (வெற்றி உறுதி) இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது நாளான நேற்றும் வவுனியாவில் இருந்து கடுமையான ஷெல் தாக்குதல்கள் ஓமந்தைப் பகுதியை நோக்கி நடத்தப்பட்டன.

ஓமந்தையில் பிரதான வீதியின இரு புறங்களையும் குறி வைத்தே பெரும்பாலான ஷெல்கள் ஏவப்பட்டன.

அதே சமயம் சண்டை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### படையினருக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து முரணான தகவல்கள்

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியாகி உள்ளன.

ரி. என். எல். தொலைக்காட்சி 28 படையினர் காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

''யெஸ். எவ். எம்'' வானொலி 23 படையினர் காயமடைந்தனர் என்றும்—

''லக்கந்த'' வானொலி 2 படையினர் இறந்தனர்; 20 படையினர் காயமடைந்தனர் என்றும்—கூறின.

## தற்போதைய படை நடவடிக்கை மாங்குளத்துடன் நிறுத்தப்படுமா?

### கிளிநொச்சியை இணைக்க மற்றொரு தாக்குதல்

கொழும்பு, மே 15

வவுனியாவுக்குக் கிழக்கே மடுகந்த ப்பகுதியிலிருந்தும்—

மேற்கே பூவரசங்குளம் பகுதியில் இருந்தும் —

மத்தியில் தாண்டிக்குளம் ஊடாகவும் நகரும் படைகள் மாங்குளத்தை அடைந்ததும் தமது நடவடிக்கையைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடும் என்று 'யுக்திய' சிங்கள வார இதழைச் சேர்ந்த மனோரஞ்சன் பி. பி. சி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்தார்.

மாங்குளத்தையும் கிளிநொச்சியையும் இணைப்பதற்குப் படையினர் மற்றொரு இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிடலாம் என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'ராடர்' நிலையம் மீது
## புலிகள் தாக்குதல்!

### சாட்டியில் 5 படையினர் பலி; ஐவர் காயம்

கொழும்பு, மே 15

வேலணை, சாட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் பெரும் மோதல் இடம் பெற்றது.

நேற்று அதிகாலை அப்பகுதியில் ராடர் நிலையம் ஒன்றைப் புலிகள் தாக்கினர் என்றும் —

அத் தாக்குதலின் போது 5 படையினர் உயிரிழக்க, ஐவர் காயமடைந்தனர் என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சாட்டி தாக்குதல் பற்றி புலிகள் தகவல்

வவுனியா, மே 15

சாட்டியில் கடற்படையின் நிலையம் ஒன்றை நேற்றுக் காலை தாக்கியதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகவும்—

ரவையுடன் 50 கலிபர் துப்பாக்கி ஒன்று உட்பட நவீன துப்பாக்கிகள் ஆகியவற்றைக் கைப்பற்றியதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-3-164)

## கிபிர் விமானங்கள் மல்லாவியில் குண்டு வீச்சு!

வவுனியா, மே 15

மல்லாவியில் நேற்றுக் காலை 10 மணிக்கு கிபிர் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின.

சேத விவரம் தெரியவில்லை.

இக்குண்டு வீச்சால் அங்கு பதற்றம் நிலவியது. மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடினர்.

அதேநேரம் — கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து மக்கள் செறிந்து வாழும் வட்டக்கச்சி, உருத்திரபுரம் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. (இ-3-164)

## ஷெல்லுக்கு இருவர் பலி நால்வர் காயம்

வவுனியா, மே 15

வவுனியாவில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் ஓமந்தை, புளியங்குளம் வீதியில் வீழ்ந்து வெடித்ததில் ஒரு பெண் உட்பட இருவர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தை யடுத்து அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

படைநடவடிக்கையையடுத்து வன்னிக்கு வடக்கேயான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. (இ-3-164)

## வவுனியாவில் நேற்று வழமை நிலை பாதிப்பு

வவுனியா, மே 15

நேற்று முழுநாளும் வவுனியா நகரப் பகுதியில் இருந்து ஓமந்தைப் பகுதி நோக்கி ஷெல் தாக்குதல்கள இடம்பெற்றதால் வவுனியா நகரின் வழமை நிலை பாதிக்கப்பட்டது. பதற்றம் நிலவியது.

நகரில் உள்ள கட்டடங்கள் அதிர்ந்தன. சன நடமாட்டமும் குறைந்து காணப்பட்டது. ஷெல் ஏவும் அதிர்ச்சியால் மக்கள் திகில் அடைந்தனர்.

அதே நேரம் நகருக்குள் தாக்குதல் ஏதும் நடக்கலாம் எனக் கருதி படையினரும், பொலீஸாரும் 10 யாருக்கு ஒருவராக நிறுத்தப்பட்டிருந்தனர். (இ-3-164)

## நெடுங்கேணியில் 3 சகோதரிகள் பலி!

வவுனியா, மே 15

நெடுங்கேணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தில் 3 சகோதரிகள் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

நேற்று அப்பகுதியில் கிபிர் விமானங்கள் வட்டமிட்டு குண்டு வீச்சை நடத்திக் கொண்டிருந்தன என்றும் —

அக் குண்டு வீச்சில் சிக்கி இறந்த இவர்களில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் சிசு வெளியேறிய நிலையில் இறந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## டொலர் மற்றும் கென்ட் பாம் பகுதியிலிருந்து ஷெல் வீச்சு

வவுனியா, மே 15

வெலிஓயா மாவட்டத்தில் டொலர் பாம், கென்ட் பாம் பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் நெடுங்கேணியில் வீழ்ந்து வெடித்ததில் 2 சிறுவர்கள் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இறந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதில் பலர் காயமடைந்தனர். இதனால் அப்பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்கின்றனர். (இ-3-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவமணி கந்தையா

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தவமணி கந்தையா 14-05-1997 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், கருணானந்தன் (பட்டயக் கணக்காளர், சாம்பியா), பவானந்தன் (பொறியியலாளர், கனடா), இரவீந்திரன் (ஆசிரியர், சாஹிரா கல்லூரி, மருதானை), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. சாந்தினி
(மகள்)

12/23 கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(46949)

## திருமதி இராஜேந்திரம் மகேஸ்வரி

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராஜேந்திரம் மகேஸ்வரி 11-05-97 அன்று காலமானார்.

அன்னார் ஒய்வுபெற்ற தபால் அதிபர் இராஜேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் பொன்னுப்பிள்ளை ஆகியோரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களாகிய செல்லையா தையல் முத்து ஆகியோரின் அன்பு மருமகளும், நளினி (கனடா), நிமலன் (கனடா), ரவிகரன் (மக்கள் வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் தாயாரும், திருக்குமரனின் (கனடா) மாமியாரும், தி. நிவேதனின் பேர்த்தியும், திருமதி சாந்தநாயகி மற்றும் காலஞ்சென்றவர்களாகிய வல்லிபுரநாதன் கந்தசாமி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15-05-97 வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
செ. இராஜேந்திரம்
(கணவன்)

தோப்பூர்,
மட்டுவில் வடக்கு.
(46942)

## திருமதி சிவகுரு பொன்னம்மா

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் விஸ்வமடுவில் வசித்தவருமாகிய திருமதி சிவகுரு பொன்னம்மா 10-05-97 சனிக்கிழமை விஸ்வமடுவில் காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம், குணரெத்தினம், தவராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணாம்பிகை, உலகராணி, கலாமணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அவரின் இறுதிக் கிரியைகள் விஸ்வமடுவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. பாலசுப்பிரமணியம்,
(மகன்)

100/3 அரசடி வீதி,
சுந்கர்மடம், யாழ்ப்பாணம்.
(46931)

## காராளபிள்ளை வினாயகசிவம்
### (கண்ணன்)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காராளபிள்ளை வடிவாம்பிகை தம்பதிகளின் மகன் வினாயகசிவம் (கண்ணன்) 06 - 05 - 1997 இல் பிரான்ஸில் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-05-97 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு பிரான்ஸில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. கோபாலசிவம்
(சகோதரர்)

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(46911)

## திருமதி அரியதுரை புவனேஸ்வரி
### (அரியாலை)

239, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கைச் சேர்ந்த திருமதி அரியதுரை புவனேஸ்வரி காலமானார்.

இவர் அரியதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி கு. பத்மாவதி, பொ. திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயரட்ணம் (லண்டன்), கமலாதேவி, தேவதாசன் (இத்தாலி), சறோஜாதேவி (ஆசிரியை, அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. வீ. இராசையா (பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலயம் - II), திரு சி. கருணாகரன் (ஆசிரியர், கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிகேதா, துவாரகா, ஆதித்தன், மேகலா, நர்மதா, காருண்ஜா, விதுஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15 - 05 - 97) இன்று பி. ப. 1. 00 மணிக்கு நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
— குடும்பத்தினர்

239, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை.
(49950)

## விபத்தில் ஊழியர் காயம்

யாழ்ப்பாணம், மே 15

காங்கேசன்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உழவு இயந்திர விபத்தில் துறைமுக ஊழியரான அரியாலையைச் சேர்ந்த செல்லையா சுந்தரலிங்கம் (வயது 45) என்பவரே காயமடைந்தார்.

துறைமுக வேலை செய்து கொண்டிருந்த வேளை நண்பகல் சாப்பாட்டிற்காகச் சென்றபோதே கப்பல் பயணிகள் தங்கும் இடத்திற்கு அருகில் இந்த விபத்து ஏற்பட்டது. (ஐ-15)

## பண்டத்தரிப்பு சங்கக் கிளைகள் மீண்டும் திறப்பு

திருநெல்வேலி, மே 15

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மாரீசன் கூடல், பாரத்தனை ஆகிய இடங்களில் சங்கக் கிளைகளை அண்மையில் மீண்டும் திறந்துள்ளது.

மக்குவில் கிளை கட்டடம் சேதமடைந்துள்ளதால் புனரமைப்புச் செய்யப்பட்டவுடன் விரைவில் அதனை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-135)

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கக்கூட்டம்

வலிகாமம் தெற்கு, மே 15

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரின் ஐந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் பத்துமணிக்கு சங்கப்பணிமனையில் நடைபெறும். (ஐ-152)

## முறைசாராப் பயிற்சிகள்

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் தொழிற் திறன் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உடையமைத்தல், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்), கணக்குப் பதிவியல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## கரப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 15

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு 19 வயது பிரிவுக்கான உப-வலய கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறும் என விளையாட்டுக்குழு செயலர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் நேற்று நடைபெற ஏற்பாடாகி பின்னர் பிற்போடப்பட்டிருந்தன. (இ-3)


எமது இன்றைய புதிய வெளியீடு!

விக்னேஸ், சங்கவி நடித்த

பொங்கலோ பொங்கல்

★ அக்கா

★ வள்ளல்

(ஒறிஜினல் பிரதி)

வீடியோ விமல்


## சாவகச்சேரி பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்

கொடிகாமம் சந்தை உட்புறக் கடைகள் ஏழுக்கும் (7), 01 - 06 - 1997 தொடக்கம் பின்வரும் இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு நடத்துவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் 27 - 05 - 97 வரை வழங்கப்படும்.

1. கைதடி மாட்டிறைச்சிக் கடை
2. கைதடி ஆட்டிறைச்சிக் கடை
3. மிருசுவில் மாட்டிறைச்சிக் கடை

மேலதிக விவரங்களைப் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்.
சாவகச்சேரி பிரதேச சபை.

கமநலசேவைகள் நிலையக் கட்டடம்,
கொடிகாமம்.
12 - 05 - 97
(சி/724)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 25 | 29 |
| 01 | 04 |
| 1932 | 1993 |

### அமரர் வீரகத்தி முத்துலிங்கம்

(உரிமையாளர்- லிங்கம்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி)

திதி: 14 - 05 - 1997

நால்வர் எமை நானிலத்தில்
நன்றாக ஆளாக்கி விட்டீர்கள்!
நயப்புடனே பல அறிவுரைகள் நல்கி
நல்ல வழி காட்டினீர்கள்!
நாங்கள் செய்யும் கடமைக்குக் காத்திராது
கடுகி நீங்கள் விரைந்ததேனோ?
நான்காண்டு சென்ற போதும்
நம் இதய சோகம் ஆறவில்லை!
நற்குஞ்சரத்தான் பாதமலர்
நன்னிழற் கீழ் உற்றிடுவீர்.

- குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(சி/723)

## மரண அறிவித்தல்

### பெர்னான்டோ அன்ரன் முத்துராஜா

மிருசுவிலைச் சேர்ந்தவரும், பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான பெர்னான்டோ அன்ரன் முத்துராஜா அவர்கள் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை செல்லத்துரை பெர்னான்டோ - வரோனிக்கா தம்பதிகளின் மூத்த புதல்வனும், மேரி திரேசம்மா (ராசாத்தியம்மா) வின் அருமைக் கணவரும், யுஸ்ரீனா ஜொய்சி முத்துராணி (பிரான்ஸ்), ஜோய் பென்சி (பிரான்ஸ்), டக்ளஸ் ஜான்சன் (ஜேர்மனி), லிவிங்ஸ்ஸன் எடின்பரோ (ஜேர்மனி). விற்றிங்ரன் எற்றிச் (R. G. STORES), வேஜின் பிறிசில்லா ஆகியோரின் அன்புத் தந்தையும், சூசைப்பிள்ளை ( துரை - பிரான்ஸ் ), ஜெரால்டின் (பிரான்ஸ்), கிறிஸ்ரியன் ( ஜேர்மனி ) ஆகியோரின் மாமனாரும், பிறையன் பிறிஷாந், கிறிஸ்ரா பிறைற்றனி (பிரான்ஸ்), ஆன் ஹாஸ்லே (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைப் பேரனும், சூசைப்பிள்ளை, யோக்கீம் பிள்ளை, சீமாம்பிள்ளை, காலஞ்சென்ற சுவாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், மேரி மெக்டலின், பிரான்ஸிஸ்கா (ஆசிரியை), அல்பிறட், மேரியோசேப்பின், றீற்றா திரேசம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (15-05-97) பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. மு. எற்றிச்
(மகன்)
(R. G. STORES)

38/4, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(46946)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கின்ஸாசாவில் இரவு ஊரடங்கு!

கின்ஸாசா, மே 15

முன்னேறி வந்துள்ள கிளர்ச்சிப் படையினர் தலைநகருக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிவரும் வேளையில் கின்ஸாசாவில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கு இரவு நேர ஊரடங்கை ஸயர் அரசு பிறப்பித்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றம் தலைநகரில் இருந்து 200 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் தடுக்கப்பட்டிருப்பதாக ஸயர் அரசு தெரிவித்துள்ள போதிலும் கிளர்ச்சிப் படைகள் கின்ஸாசாவைச் சுற்றி வளைத்துள்ளன என்றும் —

நகரின் மையப் பகுதியில் இருந்து சுமார் 100 கிலோ மீற்றர் தூரத்தில் கூட சில இடங்களில் அவர்கள் நிலை கொண்டுள்ளனர் எனவும் அங்கிருந்து வெளியாகும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகருக்கான சண்டை ஸயரில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று தென்னாபிரிக்கத் துணை அதிபரின் பேச்சாளர் ரிக்கி நாயுடு தெரிவித்தார். (ஐ)

## வாஷிங்டன் வரவேற்பு

வாஷிங்டன், மே 15

இந்திய — பாகிஸ்தான் பிரதமர்களுக்கு இடையே இடம்பெற்ற உயர் நிலைப் பேச்சுக்கள் வரலாற்றுச் சிறப்புவாய்ந்தவை எனவும் அவை குறித்து அமெரிக்கா மிகத் திருப்தியடைந்துள்ளது எனவும் அமெரிக்க வெளியுறவுச் செயலகம் தெரிவித்துள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்திற்கு விரைவில் விஜயம் செய்ய அமெரிக்க வெளியுறவுச் செயலர் மடலின் ஆல்பிறைற் விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)



லோறன் கபீலா தலைமையிலான கிளர்ச்சியாளர் கூட்டணியின் படையணி ஒன்று கிழக்கு ஸயரின் கிராமம் ஒன்றில் அணிவகுத்துச் செல்லும் காட்சி.

# இரத்தக் களரியைத் தடுக்க வீடுகளிலே தங்கியிருங்கள்!

## தலைநகர மக்களுக்கு கிளர்ச்சியாளர் அறிவுறுத்து

கின்ஸாசா, மே 15

கபீலாவின் கிளர்ச்சிப்படைகள் தலைநகர் கின்ஸாசாவுக்குள் எந்நேரமும் பிரவேசிக்கும் நிலையில் சுற்றிவளைத்து நிற்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கபீலாவின் கிளர்ச்சிப்படைகளை வரவேற்க வெள்ளைக் கொடிகளை வீடுகளில் பறக்கவிடுமாறும் —

இரத்தக் களரியைத் தவிர்க்கும் பொருட்டு மே 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வீடுகளில் தங்கியிருக்குமாறும் கின்ஸாசா நகர மக்களுக்கு கிளர்ச்சியாளர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

கின்ஸாசாவில் ஊடுருவித் தாக்கியுள்ள கிளர்ச்சியாளர்கள் மக்களுக்கு அறிவுறுத்தல்களை விடுக்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளனர்.

'ஆயுதப்படைகளும் தங்கள் முகாம்களிலேயே தங்கியிருந்து சமாதானத்துக்கு அடையாளமாக வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட வேண்டும்; சீருடை அணிந்தோர் வீதிகளில் காணப்பட்டால் அவர்கள் எதிரிகளாகவே கணிக்கப்படுவர்' என்று அத் துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமானத்தில் ஏறித் தப்ப மக்கள் முண்டியடிப்பு

கின்ஸாசா, மே 15

கின்ஸாசாவைக் கைப்பற்ற கிளர்ச்சிப் படைகள் தயாராகி வருவதை அடுத்து பெரும் எண்ணிக்கையானோர் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

அங்கு வந்து செல்லும் விமானங்களில் இடம்பிடிக்க பெரும் எண்ணிக்கையானவர்கள் பயண முகவர் நிலையங்களில் முண்டியடித்த வண்ணம் உள்ளனர். (ஐ-10)

## ஐ. நா. தூதரகம் மீதான தாக்குதல்

# நட்டஈடு செலுத்த இஸ்ரேல் மறுப்பு!

ரெல் அவிவ், மே 15

தெற்கு லெபனானில்உள்ள ஐ. நா. வளாகத்தினுள் ஆட்லறித் தாக்குதல் நடத்தியதற்காக இஸ்ரேல் 8 கோடி ரூபாவை நட்டஈடாக வழங்க வேண்டும் என்ற அரபு நாடுகளின் கோரிக்கையை இஸ்ரேலிய அரசு நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

ஈரானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கு எதிராக கடந்த ஆண்டு இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது தெற்கு லெபனானில் உள்ள ஐ. நா. அகதிகள் முகாம் மீது ஆட்லறித் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலின் போது 105 அகதிகள் அங்கு உயிரிழந்தனர்.

(ஐ-10)

உலக அரங்கில்

# தென்னாபிரிக்க மத்தியஸ்தம் இனி தொடருமா என்பதில் சந்தேகம்

## ஸயர் நெருக்கடிக்குத் தீர்வு காணும்

ஜோஹன்னஸ்பேர்க், மே 15

ஸயர் நாட்டு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான கடைசி முயற்சியாக அதிபர் முபுட்டுவுக்கும், தலைவர் கபீலாவுக்கும் இடையிலான இரண்டாவது சந்திப்பு நடைபெறுவதற்கு முன்னர் —

அதிகார மாற்றம் எவ்வாறு இடம் பெற வேண்டும் என்பதில் இரு தலைவர்களும் உடன்படிக்கை ஒன்றுக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்று தென்னாபிரிக்க மத்தியஸ்தர்கள் நிபந்தனை விதித்து விட்டனர்.

இதனையடுத்து ஸயர் நெருக்கடியில் தென்னாபிரிக்காவின் சமரச முயற்சியின் எதிர்காலம் குறித்து ஐயங்கள் எழுந்துள்ளன.

இதற்கிடையில் ஸயர் அதிபர் முபுட்டுவுக்கும் கிளர்ச்சியாளர்களின் தலைவர் கபீலாவுக்கும் நேற்று நடைபெறுவதாக இருந்த சந்திப்புக் குறித்து அமெரிக்காவின் பிரதிநிதி பில் றிச்சட்சன் கருத்துத் தெரிவிக்கையில் —

"இதுவே அமைதியை ஏற்படுத்த கடைசி வாய்ப்பாக இருக்கும். அவ்வாறான ஒரு அமைவு உருவானால் அது குறித்த பெருமைகள் யாவும் தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவையே சாரும். தலைநகர் கின்ஸாசா மீது கிளர்ச்சியாளர்களின் பிடி வலுவாகவே உள்ளது- மக்கள் பதற்றம் அடைந்துள்ளனர். அதிகாரத்தைக் கையளிக்க முபுட்டு எவ்வளவு தாமதிக்கிறாரோ அவ்வளவு விரைவாக கிளர்ச்சியாளர்கள் தலைநகரைக் கைப்பற்றுவர்" — என்று தெரிவித்தார்.

தலைநகர் கின்ஸாசாவுக்குள் அமைதியான முறையில் நுழைவது போராளிகளுக்கும் ஸயர் அரசுக்கும் நல்லது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவரும் தெரிவித்தார்.

(ஐ-10)

## ஜனதா தள்

# கட்சித் தலைவர் பதவி: லாலுவை நீக்க முயற்சி

புதுடில்லி, மே 15

இந்தியாவில் ஜனதாதள் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து பீஹார் மாநில முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ்வை நீக்குமாறு கட்சிக்குள் ஒருசாரார் நெருக்கடி கொடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலகோடிரூபா கால்நடைத் தீவன ஊழலில் சிக்கியுள்ள தலைவர் லாலு முதலமைச்சர் பதவியில் இருந்தும் விலகவேண்டும் என்ற கோரிக்கை ஏற்கனவே வலுத்துவருவது தெரிந்ததே.

தேர்தல் திணைக்களம் விதித்துள்ள காலக்கெடுவுக்கு முன்னராக ஜூன் 10 ஆம் திகதி தேர்தலை நடத்த ஜனதாதள்கட்சி தீர்மானித்துள்ளது.

தற்போது கட்சித் தலைவராக இருக்கும் லாலு பிரசாத் யாதவ் மீண்டும் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதை தடுக்கும் முயற்சியில் மறைமுக ஏற்பாடுகள் கட்சிக்குள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

# சீனத் தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்

பீஜிங், மே. 15

சீனத் தலைநகர் பீஜிங்கில் அரச பிரமுகர்களின் தங்குமிடப் பகுதிக்கு அருகே குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் அது என்று முதலில் வெளியான செய்திகளை பொலீஸார் மறுத்துள்ளனர்.

குண்டு ஒன்றை வெடிக்க வைத்து தற்கொலை செய்ய ஒருவர் முயன்ற சம்பவமே இது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தற்கொலை செய்து கொண்டவர் யார் என்பது குறித்தோ அல்லது அது ஒரு தற்கொலைத் தாக்குதலா என்பது குறித்தோ அவர்கள் எதுவும் கூற மறுத்துவிட்டனர்.

பீஜிங்கின் மத்திய பகுதியில் அண்மையில் பஸ்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## எண்ணெய் விநியோகம் நிறுத்தம்

நைஜீரியாவில் வெடித்துள்ள இனக்கலவரங்களை அடுத்து 'ஷெல்' என்ற சர்வதேச நிறுவனம் அங்கு எண்ணெய் விநியோகத்தை நிறுத்தி வைத்துள்ளது.

தினமும் சுமார் ஒரு இலட்சத்து பத்தாயிரம் பீப்பா எண்ணெயை வழங்கிவந்த அந்த நிறுவனத்தை ஆயுதமேந்திய போராளிகள் அச்சுறுத்தியதாகத் தெரிகிறது.

(ஐ-10)

## லெபனானிலும் பாப்பரசரை கொல்லச் சதி

பெய்ரூட், மே 15

கடந்த வார இறுதியில் பாப்பரசர் லெபனானுக்கு விஜயம் செய்தபோது அங்கு வைத்து அவரைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருந்ததாக கனடா மற்றும் இத்தாலி நாடுகளிலுள்ள 'இன்ரபோல்' அமைப்பு லெபனான் உள்துறை அமைச்சிற்குத் தகவல் கொடுத்திருந்தது.

தகவலை இரகசியமாக வைத்துக்கொண்டு அவ்வாறு எதுவும் நடவாமலிருக்க அதி உயர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என லெபனான் உள்துறை அமைச்சர் தெரிவித்தார். (ஐ-10)

★ பெரு பணயக்கைதிகள் விவகாரம்:

# ஜப்பானியத் தூதர் பதவி நீக்கம்!

ரோக்கியோ, மே 15

பெரு நாட்டில் பணயக்கைதிகள் விவகாரம் இடம்பெற்றபோது அங்குள்ள ஜப்பானியத் தூதரகத்தில் கடமையாற்றிய ஜப்பானியத் தூதர் மொரியிஷா அஹோக்கியை ஜப்பானிய அரசு பதவி நீக்கம் செய்துள்ளது.

கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி தூதரக இல்லத்தில் நடந்த ராஜீக விருந்துபசாரத்தின் போதும், அதன் பின்னரும் போதுமான முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளத்தவறியதாக் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. (ஐ)

# ஜம்மு காஷ்மீரில் இருந்து இந்தியப்படை விலகாது!

## ஷெரீப்பிடம் குஜ்ரால் தெரிவிப்பு

மாலே, மே 15

ஜம்மு காஷ்மீரில் முஸ்லிம் பிரிவினைவாதிகள் தங்கள் பிரிவினைப் போராட்டத்தை கைவிடும் வரை இந்தியப் படைகள் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட மாட்டாது.

இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

மாலைதீவுகளின் தலைநகர் மாலேயில் இடம் பெற்ற சந்திப்பின் போது காஷ்மீர் மாநிலத்திலிருந்து இந்தியா தனது இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும். என பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப் வேண்டுகோள் விடுத்தார். அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் குஜ்ரால் இதனைத் தெரிவித்தார் என்று மாலேயில் இருந்து வெளியான அறிக்கைகள் தெரிவித்தன.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராலி, ஆவரம்பிட்டி,

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

## வருடாந்த மகோற்சவம்

ஈசுர ஆண்டு வைகாசித் திங்கள் 2 ஆம் நாள் (1997 05 - 16) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒன்பது நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

★ பகல் திருவிழா காலை 9 மணி தொடக்கம் பகல் 1. 30 மணி வரையும்.

★ இரவுத்திருவிழா பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து 5. 30 மணிக்கு நிறைவுறும்

என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(46926) **பரிபாலனசபை,**

தும்பளை

## நெல்லண்டை அம்மன் கோயில்

தருமபரிபாலன சபை —பதிவு இல. HR / 5 JA / 419
ஸ்தாபிதம்: 31 - 05 - 1945

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

## 1997 - 98

இக் கூட்டம் 1997 - 05 - 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10–30 மணிக்கு திருஞானசம்பந்தர் மடத்தில், திரு ஆ. சிவசுவாமி (பிரதேச செயலர் வடமாராட்சி வடக்கு) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாக சபைக்கு பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | திரு. சி. சாம்பசிவம் |
| உப தலைவர் (i) | திரு. ச. ரவீந்திரன் |
| உப தலைவர் (ii) | திரு. நா. விஜபரத்தினம் |
| செயலாளர் | திரு. ஆ. கார்த்திகேசு |
| உப செயலாளர் | திரு. கா. புஸ்பராசா |
| பொருளாளர் | திரு. சி. தங்கவடிவேலு |
| உப பொருளாளர் | திரு. பா. சுப்பிரமணியம் |

முகாமையாளர் (i) நெல்லண்டை அம்மன் கோயில்: திரு. க. பி. மார்க்கண்டு

முகாமையாளர் (ii) தும்பளை முருகன் கோயில்: திரு. ஆ சிவகுமாரன்

முகாமையாளர் (iii) தும்பளை முத்துமாரி அம்மன் கோயில்: திரு, ஆ. பரம்சோதி


நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. சி. கனகலிங்கம்
திரு. சி. சாந்தலிங்கம்
திரு. க. சற்குணம்
திரு. இ. கணேசநாதன்
திரு. ஆ. சின்னையா

**ஆ. கார்த்திகேசு**
செயலாளர்
து. நெ. அ. கோ. த. ப. சபை

தும்பளை,
பருத்தித்துறை. (46927)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி சீனித்தம்பி

தோற்றம்: 23-09-1923 மறைவு: 27-05-19்6

திதி: (15 — 05 — 1997)

பாசமிகு தந்தையே! ஆசையோடு அன்புகாட்டி
நேசமுடன் எமைவளர்த்தீரே
ஆண்டு ஒன்று சென்றதையா ஆறவில்லை எம்மனது
சொந்தமெல்லாம் துறந்து இறைவனடி சேர்ந்தீரே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

டச்றோட், வீமன்காமம்,
தெல்லிப்பழை. (46916)

## சமய நிகழ்வுகளில்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியா நிகழ்ச்சிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

பாலஸ்தாபன பிரார்த்தனை, விக்கினேஸ்வர பூஜை அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம் ஆகியவை நாளையும்— மிருத்சங்கிரணம், யாக பூஜை, தீபாராதனை ஆகியவை சனிக்கிழமையும் இடம் பெறும். (ஐ-4)

★ ★ ★

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பகல் திருவிழா 9 மணி முதல் 1.30 மணி வரையும்,இரவு திருவிழா பிற்பகல் 3 மணிமுதல்5.30 மணி வரையும் நடைபெறும். (ஐ-15)

★ ★ ★

அராலி. மே 15

சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்குதேர்த்திருவிழாவும்— மறு நாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (ஐ-12)

## சங்கானையில் வர்த்தகக்கிளை

அராலி, மே 15

சங்கானையில் வர்த்தக திணைக்கள கிளை ஒன்று கடந்த 9 ஆம் திகதி திறக்கப் பட்டுள்ளது. சங்கானைப் பிரதேச செயலகப்பகுதியில் வர்த்தக திணைக்கள விற்பனை நிலையம் ஒன்றுதிறக்கப் படவேண்டும் என்ற இப்பிரதேச மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கு இணங்ககிளை திறக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## செம்பியன் பற்றில் பம்பாய் வெங்காயம்

யாழ்ப்பாணம், மே 15

செம்பியன்பற்றில் தற்போது பம்பாய் வெங்காயச் செய்கையும், கௌபி, பயறு, உழுந்து போன்ற சிறுபோக பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலோலி, அம்பன், புத்தூர் பகுதிகளுக்கான கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ் உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

செம்பியன்பற்றுப் பகுதி பம்பாய் வெங்காயச் செய்கைக்கு மிகவும் பொருத்தமான இடம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## மாஹோவில் தபாற் பொதிகள்

யாழ்ப்பாணம், மே. 15

பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ள ''மாஹோ'' கப்பலில் 391 தபாற்பொதிகளும் [illegible] எடுத்து வரப்படுவதாக யாழ். பிரதம தபாலதிபர் ச. [illegible]வரன் தெரிவித்தார். (ஐ-10)

## யாழ். செயலகப் பகுதியில் முத்திரை பெறுவதில் சிரமம்

யாழ்ப்பாணம், மே 15

சுண்டுக்குளி தபாலகத்தில் 5 ரூபா, 10 ரூபா போன்ற முத்திரைகளுக்கு கடந்த சில நாள்களாகத் தட்டுப்பாடு நிலவுகிறது.

யாழ். செயலகத்துக்கு முன்பாகவுள்ள இந்தத் தபாலகத்தில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் யாழ். செயலகத்தில் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கும் காணி உறுதி, மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், தேர்தல் வாக்காளர் அட்டவணைப் பிரதிகள் போன்றவற்றைப் பெறுவதற்கும் தேவைப்படும் முத்திரைகளைப் பெறுவதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை — யாழ். செயலக வளாகத்தினுள் முத்திரைகள் கூடிய விலைக்கு விற்கப்படுவதையும் காண முடிந்தது. (ஐ-5)

பச்சிலைப்பள்ளி

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பளை

## பதவி வெற்றிடம்

(1) வெதுப்பி உற்பத்தியாளர் (பேக்கர்)
(2) வெதுப்பக உதவியாளர்

விண்ணப்பம் கோரல்:-

மேற்படி பதவிகளுக்குத் தகைமையுடைய ஆண்களிடம் இருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

1. வயது 18 - 45 வருடங்கள்
2. கல்வித்தகைமை – 8 ஆம் வகுப்பு சித்தி
3. நல்ல தேக ஆரோக்கியம் உடையவராய் இருத்தல் வேண்டும்.
4. வெதுப்பி உற்பத்தி அனுபவச் சான்றிதழ்

குறிப்பு:- சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் ''பொது முகாமையாளர் பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை'' என்ற முகவரிக்கு 30 - 05 - 1997 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் இடது பக்க மேலுறையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிடல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை.

(சி-714)

உ
சிவமயம்

## நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய

பரிபாலன சபை

## அறிவித்தல்

மேற்படி நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயத்தின் மகாசபைப் பொதுக்கூட்டம் 1997 பங்குனி மாதம் நடைபெற வேண்டியிருந்தும், தவிர்க்க முடியாத சில காரணங்களால் இன்னும் நடைபெறாமல் உள்ளது. எனவே புதிதாகச் சேரும் அங்கத்தவர்கள் ஆலயப் பணிமனைக் கிளாக்கரிடம் ரூபா 12/- செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்று அங்கத்தவர்களாகும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், 1996 இல் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக அநேகமான உறுப்பினர்கள் (உபதலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட) குடாநாட்டைவிட்டு வெளியேறி உள்ளனர். இவர்கள் தலைவர் என்ற ரீதியில் எனக்கு எந்தவிதமான முன் அறிவித்தலும் கொடுக்காமல் சென்றுவிட்டமையினால் அவர்கள் தாமாகவே தமது பதவியில் இருந்து விலகிக் கொண்டதாக ஏற்றுக்கொண்டு அச்சபையை இடைநிறுத்தம் செய்து, எஞ்சியிருந்த உறுப்பினர்களை உள்ளடக்கி ஒரு இடைக்காலச்சபையை அடுத்த மகாசபை உருவாக்கும் வரை நியமித்துள்ளேன்.

எனவே, நிர்வாகப் பொறுப்புகள் அனைத்தும் நேரடியாக எனது கவனத்தின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன். ஆதலால் ஆலயத்தின் (திருப்பணி உட்பட). எந்த விசேட கருமங்களும் தலைவரின் அனுமதி பெற்றே நடைபெற வேண்டும் என்றும், இதனை மீறுவோர் மீது நீதிமன்றின்மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

பொருளாளர் திரு. பொ. சிவராசாவை பரு. கோட்டுத்தீர்வை ரீஆர் - 105 இன், 11 ஆம் பிரிவின் 2ஆம், 3ஆம் பந்திகளின்படி பதவி நீக்கம் செய்து உள்ளேன். அவர் கணக்கு (வரவு/ செலவு) விவரங்களை என்னிடம் ஒப்படைக்காமல் இருப்பதால் மகாசபைப் பொதுக்கூட்டம் நடத்த முடியாமல் இருக்கின்றேன் என்பதை அறியத்தருகின்றேன். எனவே ஆலய விடயம் சம்பந்தமாக முன்னைய பொருளாளர் திரு. பொ. சிவராசா அவர்களுடன் எந்தத் தொடர்பும் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

(இது ஆலயத்தில் சம்பளம் பெறும் பணியாளருக்கும் பொருந்தும்.)

**மு. சிதம்பரப்பிள்ளை**
தலைவர்
பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்
நாகர்கோயில் நாகதம்பிரான்
ஆலய பரிபாலன சபை.

(46940)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சந்திரிகா-ரணில் இடையே

# பொக்ஸ் மேற்கொண்ட சமரசம்

# அவரது தனிப்பட்ட முயற்சியாம்!

## இப்போது கூறுகின்றார் லக்ஷ்மன் கதிர்காமர்

கொழும்பு, மே 15

''இலங்கை விவகாரத்தில் பிரிட்டிஷ் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம்பொக்ஸ் எடுத்த முயற்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நடவடிக்கை இல்லை; அதில் இலங்கை அரசாங்கமோ, பிரிட்டிஷ் அரசாங்கமோ சம்பந்தப்படவில்லை''

— இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு இப்போது கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

மாலைதீவில் நடைபெறும் 'சார்க்' மாநாட்டுக்குச் சென்றுள்ள அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை அங்கு வைத்துப் பேட்டி கண்ட ''த ஐலண்ட்'' பத்திரிகைச் செய்தியாளரிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி ;- பிரிட்டிஷ் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் கடைப்பிடித்த நடைமுறைக்கு பிரிட்டிஷ் புதிய அரசாங்கம் சாதகமாக உள்ளதா?

பதில் :- லியம் பொக்ஸ் எடுத்த முயற்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நடவடிக்கை அல்ல. அது அவரின் தனிப்பட்ட முயற்சியாகும். பிரிட்டிஷ் அரசாங்கமோ, இலங்கை அரசாங்கமோ அதில் சம்பந்தப்படவில்லை.

அவர் சார்ந்த கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், ஐ.தே. கட்சிக்கும் இடையில் நீண்ட காலம் தொடர்புகள் உண்டு. அவர் மேற்கொண்ட முயற்சி இரு கட்சிகளுக்கும் இடையேயான சிநேகபூர்வமான நடவடிக்கையாகும்.

அந்த நேரத்தில் பிரதி வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் அவர் இலங்கை வந்ததால் நான் அவருடன் பேசினேன்.

கேள்வி:- பிரிட்டிஷ் பிரதமருக்கு விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உத்தியோகபூர்வமாகக் கடிதம் எழுதியுள்ளாரே?

பதில்:- என்ன மாதிரியான கடிதம் அது என்று தெரியவில்லை.

கேள்வி:- விடுதலைப் புலிகளை தடை செய்யுமாறு அமெரிக்காவிடம் கோரும் தாங்கள் இலங்கையில் அந்த இயக்கத்தை ஏன் இதுவரை தடை செய்யவில்லை?

பதில்:- நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அமெரிக்கா சென்ற சமயம் விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு அமெரிக்காவிடம் கேட்கவில்லை. அமெரிக்காவிடம் உள்ள தீவிரவாதிகள் பட்டியலில் விடுதலைப் புலிகளையும் சேர்க்குமாறே அவர் அமெரிக்காவிடம் கேட்டார்.

கேள்வி:- இந்தியா விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ள போது நீங்கள் மட்டும் ஏன் தடை செய்யவில்லை?

பதில்:- இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை யடுத்தே அந்த இயக்கத்தை இந்தியா தடை செய்தது.

கேள்வி:- விடுதலைப் புலிகள் இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்த சமயம் அந்த இயக்கத்தைத் தடை செய்திருக்கலாமே?

பதில்:- அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.க. விடுதலைப் புலிகளைத் தடை செய்யத் தவறிவிட்டது.

கேள்வி:- பிறேமாவின் கொலையை வைத்து, நீங்கள் ஆட்சிக்கு வந்த பின் விடுதலைப் புலிகளைத் தடைசெய்திருக்கலாமே?

பதில்:- அது பழைய பிரச்சினையாகிவிட்டது. பேசுவது வேறு; ஒருவர் குற்றமிழைப்பது வேறு நீதிமன்றம் செல்ல சாட்சியங்கள் வேண்டுமே. பிறேமா கொலைக்கு சாட்சியங்கள் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் மத்திய வங்கி குண்டு வெடிப்பு தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது நாம் வழக்குத் தொடர்ந்துள்ளோம்— என்றார்.

(உ-3-150)

## அனலை தீவில்

# 18 ஆசிரியர்கள் இருந்த இடத்தில் மூவர் மட்டுமே தற்போது கடமை

18ஆசிரியர்கள் கடமையாற்றிய அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்தில் மூன்று ஆசிரியர்கள் மட்டுமே தற்சமயம் கடமையில் உள்ளனர்.

தற்போதைய ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கல்வித்தரம் குன்றியுள்ளதாகவும்—

முன்னூறுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கே பயிலுவதாகவும்—

போதிய ஆசிரியர்கள் இல்லாமையால் பெரும்பாலான மாணவர்கள் தமது கல்விக்காக நயினாதீவுக்குச் சென்றுள்ளதாகவும்— அனலைதீவு கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் எஸ். கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

(இ-111)

## பிரமாண வேலைத் திட்டத்துக்கு

# வலி. தென்மேற்கு பிரிவுக்கு ரூ. 2லட்சத்து 45ஆயிரம் ஒதுக்கீடு

திருநெல்வேலி, மே 15

வலி. தென்மேற்கு பிரதேச சபை பிரிவில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுவதற்கு பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சத்து 45 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு இப்பிரிவில் மூன்று குழாய்க் கிணறுகள் நிறுவப்படவுள்ளன. அத்துடன் இரு வீதிகள் திருத்தப்படுமெனவும், மூன்று பொதுக் கிணறுகள் திருத்தப்பட்டுப் புனரமைக்கப்(ப)போது மலசல கூடமொன்று அமைக்கப்படுமென்றும் வலி. தென்மேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் தெரிவித்தார்.

இதே வேளை இப்பிரதேச சபைப் பிரிவிலுள்ள மானிப்பாய்ப் பட்டினபொது நூலகத்திற்கும், ஆனைக்கோட்டையிலுள்ள மானிப்பாய் கிராம உப அலுவலக நூல் நிலையத்திற்கும் புதிய நூல்களை கொள்வனவு செய்வதற்கென 12 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

# பிரசவ விடுதியில் 8 தாதியரே கடமை

## ஓய்வு இன்றித் தொடர்ந்து பணி

யாழ்ப்பாணம், மே 15

யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதியில் தற்போது நிலவும் மருத்துவத்தாதியர் பற்றாக்குறையால் பிரவச மருத்துவ சேவையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

பிரசவத்தாய்மார்கள் அதிகமாக அனுமதிக்கப்பட்டு வரும் இக்கால வேளையில் பிரசவவிடுதியில் மொத்தமாக எட்டு மருத்துவத்தாதியர் மாத்திரமே கடமைபுரிகின்றனர்.

இப்பிரிவில் தினமும் சராசரி 15-க்கு குறையாத பிரசவங்கள் நடைபெற்று வருகின்றன. சுமார் 32 மருத்துவத் தாதியர்கடமை புரிந்த இப்பிரிவில் தற்போது 8 பேர் மாத்திரமே கடமை புரிகின்றனர்.

இவர்கள் தமது வாராந்த விடுமுறையை அல்லது தமது சொந்த தேவைகளுக்கான லீவையோ எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் பலவித சிரமங்களுக்கு மத்தியில் பணி புரிகின்றனர்.

(ஐ-15)

## மாணவருக்கு ஊக்குவிப்புப்பரிசு

வலிகாமம், தெற்கு மே 15

மானிப்பாய் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியெய்திய 36 மாணவர்களுக்கு—ம்

1995 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கும் கல்வி ஊக்குவிப்பு பரிசுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்து, மானிப்பாய் பரிஷ்லியோகழகத்தினரால் இந்த ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

(ஐ-152)

## இன்று கொடித்தினம்

கொழும்புத்துறை, மே 15

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த கொடித் தினம் இன்றாகும்.

இன்று காலை 9 மணிக்கு நல்லை ஆதீனத்தில் பேரவைத் தலைவர் வே. கெ. தனபாலன் தலைமையில் இடம் பெறும் வைபவத்தில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் முதலாவது கொடியைப் பெற்று கொடித் தினத்தை ஆரம்பித்து வைப்பார்.

குடாநாட்டில் பாடசாலைகளிலும் சமய மற்றும் பொது நிறுவனங்களிலும் கொடித் தினம் அனுஷ்டிக்கப்படும்.

(ஐ-30)

# தேங்காய் எண்ணெய் கப்பலில் வந்தது

குடாநாட்டில் தேங்காய் எண்ணெய்க்கு நிலவி வந்த தட்டுப்பாடு நீங்கிவருகிறது.

கொழும்பிலிருந்து நீண்டகாலமாக தேங்காய் எண்ணெய் இங்கு வந்து சேராமையினால் அண்மைக் காலமாக ஒருலீற்றர் தேங்காய் எண்ணெய் 90ரூபாவாக விற்கப்பட்டு வந்தது.

தற்போது ''மோஹான் ஸாங்'' என்ற கப்பலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனியார் வர்த்தகர் ஒருவர் கொழும்பில் இருந்து தேங்காய் எண்ணெய் எடுத்து வந்ததையடுத்து இதன் விலை குறைந்து வருகிறது.

இப்போது ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 75ரூபாவாக விற்பனையாகிறது.

(ஐ-173)

# 20 வடக்கு விவசாயிகள் தெற்கில் சுற்றுலா!

வவுனியா, மே 15

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த இருபது விவசாயிகளை தென்னிலங்கையில் பத்து நாள்கள் அறிவியல் சுற்றுலாவுக்குக் கூட்டிச் செல்லும் திட்டம் ஒன்றை வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபை, யுனெஸ்கோவின் உதவியுடன் இம்மாத இறுதியில் செயற்படுத்த விருப்பதாக அறியவருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மாணவர்களை அண்மையில் தென்னிலங்கையில் கல்விச் சுற்றுலாவுக்கு கூட்டிச் சென்றது போல —

விவசாயிகளையும் விவசாயச் சுற்றுலா ஒன்றுக்குக் கூட்டிச் செல்ல திட்டமிடப்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்கள், மகாவலி அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகள், தென் இலங்கையில் கைக்கொள்ளப்படும் விவசாய முறைகள் ஆகியவற்றை இச்சுற்றுலாவில் செல்லும் வடபகுதி விவசாயிகள் நேரில் பார்வையிடுவார்கள் என்றும் —

தென்னிலங்கை விவசாயிகளுடன் அவர்கள் பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடுவார்கள் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-164)

## நூலக ஆலோசனை சபை

திருநெல்வேலி, மே 15

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நூலகங்களுக்கு தேவையான புதிய நூல்களை கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை வழங்குவதற்காக7 அங்கத்தவர்களைக் கொண்ட நூலக ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-135)


தொல்புரம், மூளாய்

ஐக்கிய பரஸ்பர சகாய சங்கம் (வ/து)

68 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 01 - 06 - 1997 (ஞாயிற்றுக் கிழமை) மு. ப. 10.00 மணி தொடக்கம் (இலங்கை நேரம்)

யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில்

தலைவர் திரு. வே. நாகராசா

அவர்களின் தலைமையில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட அழைப்பிதழ் வழங்க முடியாதமையையிட்டு மனம் வருந்துகின்றோம்.

நிகழ்ச்சி நிரல் அடுத்த பத்திரிகை அறிவித்தலில் வெளியிடப்படும்.

வே. நாகராசா,
தலைவர்.

சங்கச் சேவையில்
தி. உதயசூரியன்
உப-செயலாளர்

(46938)



இதய அஞ்சலி



யா/எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை
தேவ ஊழியர்

செபஸ்ரியன்பிள்ளை அன்ரனிமில்ஸ்
(றதீஸ்)

அவர்களின் பிரிவு குறித்து வேதனைப் படுகின்றோம்.
நித்திய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதை விரும்பும்
எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை

போதகர்கள், தேவ ஊழியர்கள்,
அங்கத்தவர்கள்/ விசுவாசிகள்.

21, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(46941)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல ரி.வி. நிகழ்ச்சிகளையும் தெளிவாகப்பார்ப்பதற்கு ரூபா 550/ இல் இருந்து 2500/- வரைக்கும் வீனஸ் அன்ரனா விற்பனைக்கு உண்டு. வீனஸ் தனபாலசிங்சிங்சம் Dip- In Electronic Engineering (London) 284 Stanly Road, Jaffna, (நாகவிகாரை முன்பாக). [46888]

பற்றறியுடன் சோலர் விற்பனைக்கு உண்டு .(12V,20W ஆஸ்திரேலியத் தயாரிப்பு) தொடர்பு: சி. பத்மநாதன் இல :B233,கல்லூரிஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (46892)

சகல விதமான TV. றேடியோ, அசுற்குரிய I.C டெக்பெல்ற், E.H.T. ரான்ஸ்போமர், அன்ரனா, அன்ரனா கிளிப், ஜங்சன்பொக்ஸ் விற்பனைக்குண்டு தொடர்பு: 310. பலாலி வீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடம். [46920]

பழைய 'றலி' சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 160, கோயில் வீதி, யாழ்ப்பாணம், [46917]

### திருத்துதல்

பழுதடைந்த சகல றேடியோ, டெக், ரி.வி, மணிக்கூடுகள் திருத்திக் கொடுக்கப்படும். வீனஸ் தனபாலசிங்கம், Dip - in Electronic Engineering (London) 284, Stanly Road, (நாகவிகாரை முன்பாக) Jaffna. [46889]

### தவறிவிட்டது

திருநாவுக்கரசு சிறிதீபன் என்பவருடைய விசேட அடையாள அட்டை 0907014702 தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் சின்னத்துரை திருநாவுக்கரசு தம்பளாவத்தை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [46923]

சிவானந்தம் தர்மினி என்பவரது தேசிய அடையாள அட்டை ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கடு எடுத்தவர்கள் த. சிவானந்தம் சூராவத்தை, மயிலங்காடு எனும் முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். [46933]

### காணிவிற்பனைக்குண்டு

பட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயம் மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் நுணாவில் - மட்டுவில் வீதியில், வீட்டுடன் 03 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது தொடர்பு:- 43, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [46928]

### ஆங்கில வகுப்புக்கள்

சுலபமாக ஆங்கிலம் பயில ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [46932]

## விற்பனைக்கு

நாய், மாடு, பன்றி, ஆடு, கோழி போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கு குட்டை, தோல்வியாதிகளைக் குணமாக்க வல்ல ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பூச்சு மருந்து விற்பனைக்கு வந்துள்ளது.

சி தம்பிப்பிள்ளை
அன்சன்ஸ்
191, கே. கே. எஸ். வீதி;
யாழ்ப்பாணம்.
(46936)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கில்லறி அக்னஸ் திரவியம்

எமது திட்ட உத்தியோகத்தர்
திரு. அருள்ஞானம்

அவர்களின் தாயாரின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊழியர்கள்
(46937) "கெயர்" இன்ரநஷனல்

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி நடராஜசிங்கம் கனகேஸ்வரி

பிறப்பு: 18 — 05 — 1928
இறப்பு: 27 — 04 — 1996
திதி: 15 - 05 - 1997


அளவற்ற அன்பு வைத்து, பலர் போற்றும் பண்பைப் பெற்று, குறைவற்ற பாசம் வைத்து, செழிப்புடன் வாழ வைத்த அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

34, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (46912)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணிற்கு மலர்ந்தது: 21 — 12 — 1943



விண்ணிற்கு விரைந்தது: 15 — 05 — 1994

அமரர்
### அந்தோனிப்பிள்ளை இம்மானுவல் ஜெயசிங்கம்
(மதுவரி அத்தியட்சகர்)

''உயிர்ப்பும் உயிரும் நானே;
என்னில் விசுவாசங் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்.'' - அரு. 11:25-

பொறுமையான துணைவனாய்
அன்பான கணவனாய்
எனக்கு அன்பு காட்டிய தெய்வமே!
என்னைத் தவிக்கவிட்டு
திடீரென மறைந்தாலும்
நீங்கள் எனக்கு காட்டிய
அன்பும், பண்பும், பாசமும் என்றும்
என் நெஞ்சை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

உங்கள் நீங்கா நினைவில் வாழும்:
அன்பு மனைவி,
மற்றும் சகோதரர்கள், உற்றார்,
உறவினர்.

சரஸ்வதி வித்தியாலய வீதி,
நெல்லியடி,
கரவெட்டி. (46903)

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்
(வ/து)

பின்வரும் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. தட்டச்சாளர் பயிற்சியாளர்
02. எழுதுநர் பயிற்சியாளர்.

விவரங்களைச் சங்கக் கிளைகளிலும் தலைமைக் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 19 - 05 - 97 ஆகும்.

பொது முகாமையாளர்,

உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்,
உடுப்பிட்டி.
(சி/ 720)

## நல்வாழ்த்து நாம்சொல்வோம்

எமது சங்கத்தின் உறுப்பினரும்
யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளரும்
இலங்கை நிர்வாக சேவையின்
முதலாம் வகுப்பைச் சேர்ந்தவருமாகிய

### ஸ்ரீமான் வே. பொ. பாலசிங்கம்
அவர்கள்

[B. A. (Cey.), Dip. in L. G. (Admn.), S. L. A. S. Class I]


இலங்கை அரசின் புலமைப்பரிசிலைப் பெற்று
பாரதத் தலைநகர் புதுடில்லியில் அமைந்துள்ள
மனிதவள முகாமைத்துவக் குடியமர்வு நிலையத்தில்
மூன்றுமாதக் கற்கைநெறி ஒன்றினைச்
சிறப்புடன் பூர்த்தி செய்து
நாடு திரும்பியமை குறித்து பாராட்டி மகிழ்வதோடு,
மாநகரசபை ஆணையாளராக அவர் பதவியேற்று,
இன்றுடன் எட்டு ஆண்டுகளாக
யாழ். நகரத்துக்கும், மக்களுக்கும் அவர் ஆற்றி வரும்
சேவை தங்குதடையின்றித் தொடர வேண்டுமென
உளமார வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் சிக்கன
கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15. 05. 97 (சி/719)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 06 — 03 — 1926



மறைவு: 25 — 04 — 1997

அமரர்
### செல்வராணி சுப்பிரமணியம்
(ராணி)

எங்கள் வீட்டில் சுடர் விட்டு
எரிந்த விளக்கு அணைந்ததுவோ?
உங்கள் அன்பு அரவணைப்பு
உதிரம் வரையும் சென்றோடத்
தாங்கி எம்மை வளர்த்திட்ட
தெய்வம் நீங்கள்,
உங்கள் முகம் காண
ஏங்கி இரங்கி ஓடிவந்தோம்;
எம்மால் காண முடியவில்லை.
இறைவன் நிழல் என்றென்றும்
இருக்கத் தினமும் இறைஞ்சுகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர்வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள், மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்.

'ஸ்ரீபவனம்'
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (46907)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கடினப் பணி

வலிகாமம் வடக்கில் பதினொரு கிராம சேவையாளர் பிரிவுகளில் மூவாயிரத்து எழுநூறு குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கு யாழ்ப்பாணம் செயலக அதிகாரிகள் விரிவான திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்கள். மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களின் வாழ்க்கைத் தேவைக்குரிய உட்கட்டுமானங்களைச் செய்வதற்குப் பத்துக்கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

வலிகாமம் வடக்கு மக்கள் பல வருடங்களுக்கு முன்னரே தமது சொந்தக் குடியிருப்புகளை விட்டு இடம் பெயர்ந்தவர்கள். தம்மை மீளக்குடியமர வசதி செய்யுமாறு கடந்த ஒரு வருடகாலமாக அவர்கள் பல வழிகளிலும் கோரிக்கை விடுத்து வந்தார்கள்; வலியுறுத்தி வந்தார்கள்.

ஆகையால் அரசின் மீளக் குடியமர்வுத் திட்டத்தினை அவர்கள் வரவேற்பார்கள். இது விடயத்தில் தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

வலிகாமம் வடக்கு இப்போது ஒரு வனாந்தரம் போலக் காட்சியளிக்கிறது. வீடுகள் மற்றும் பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் அனேகமானவை தரை மட்டமாகி உள்ளன. இங்கு மக்களை மீளக்குடியமர்த்துவது என்பது காட்டை நாடாக்குவது போன்ற கடினமான பணியாகும்.

மக்களைக் குடியமர்த்துவது என்பது அவர்களைத் தமது சொந்த நிலத்தில் குடியிருக்க வசதி செய்வது மட்டுமன்று. அவர்களது அத்தியாவசிய தேவைகள் உட்பட ஏனைய வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதுமாகும்.

எனவே இது விடயத்தில் சரியான திட்டமிடுதலும், திட்டமிடப்பட்டதைச் சீர் ஒழுங்குடன் செயற்படுத்துதலும் அவசியம். எழுந்தமானத்தில் ''தெந்தட்டில்'' செயலாற்றக்கூடாது.

வலி-வடக்கு மக்களை மீளக்குடியமர்த்தும் பணியில் சம்பந்தமுள்ள சகல மட்டத்தினர்களும், தரப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால்தான் இதில் வெற்றி காணலாம். ஒரு சாரார் ஒரு பக்கமும் இன்னொரு சாரார் இன்னொரு பக்கமாகவும் இழுபட்டுக் கொண்டிருந்தால் அல்லது இழுத்தடித்துக் காலதாமதம் செய்தால் மக்களுக்கு உரிய பயன் கிடைக்கமாட்டாது.

மீளக் குடியமர்த்தும் பணியை சம்பளத்துக்கான தொழிலாக மட்டும் ஆற்றாமல் மக்களுக்குச் செய்யும் சமூகப் பணியாகவும் மனமொன்றிச் செய்தாலே உயர்ந்த பயன் கிடைக்கும்.

அரசாங்கத் திணைக்களங்களில் அசமந்தம், அக்கறை இன்மை, ஏனோ தானோ என்ற போக்கு, தாமதப் படுத்துதல், அதிகாரிகள் தமக்குள்ளேயே ஒரு பகுதியினர் மீது மறுசாரார் குற்றஞ்சாட்டுதல் என்பன சர்வ சாதாரணம்.

ஆகையால், மேற்கண்ட நோய்கள் வலி - வடக்கு மக்களை மீளக் குடியமர்த்தும் திட்டத்திலும் தொற்றிக் கொள்ள அனுமதிக்கலாகாது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் இந்தப் பாரிய பணியில் சமூகப் பொறுப்புணர்வுடன் செயலாற்றுவது மிகவும் வேண்டப்படுகிறது.

அரசினரும் அதிகாரிகளும் இது விடயத்தில் உரிய கவனம் எடுப்பார்களாக.

## 136 இலங்கை அகதிகள் இராமேஸ்வரத்துக்கு

இராமேஸ்வரம், மே 15

இலங்கையில் இருந்து 136 தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்துக்கு வந்துசேர்ந்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

வவுனியா, தலைமன்னார், நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் நான்கு இயந்திரப் படகுகளில் சேரன்கோட்டைப் பகுதியில் வந்து இறங்கினர்.

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நடைபெறும் மோதலுக்கு அஞ்சியே அங்கு வந்து சேர்ந்ததாக அகதிகள் தெரிவித்தனர். இவர்களை ஏற்றிச் சென்ற படகுகளை பொலீஸார் பறிமுதல் செய்தனர்.

இதேவேளை— விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்குள் படையினர் பெரும் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதை அடுத்து மேலும் அகதிகளின் வருகை அதிகரிக்கலாம் என்று இராமேஸ்வரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-5)

### ஆனைக்கோட்டையில் இறந்ததாக

## இரு இளைஞர்களின் சடலங்கள் ஒப்படைப்பு

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இறந்ததாக இரண்டு இனந்தெரியாத சடலங்கள் யாழ்ப்பாணப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க இந்த இரு இளைஞர்களின் சடலங்களில் நெஞ்சிலும், தலையிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இரு சடலங்களிலும் மூளை சிதறிக் காணப்பட்டது.

சடலங்கள் இனம் காணும் பொருட்டும், மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (இ-15)

### பொன்விழா கொண்டாட்டங்களுடன்

## 10 ஆவது 'சார்க்' மாநாடு கொழும்பில் நடைபெறும்

மாலே, மே 15

பத்தாவது 'சார்க்' உச்சி மாநாடு அடுத்த ஆண்டு இலங்கையில் நடை பெறும். இதுதொடர்பான தீர்மானம் நேற்று முன்தினம் மாலேயில் 'சார்க்' தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டது.

சுதந்திரம் பெற்ற 50ஆவது பொன் விழாவை இலங்கை அடுத்த ஆண்டு கொண்டாட உள்ளது. பொன் விழா நிகழ்வுகளுடன் சேர்த்து 'சார்க்' மாநாட்டையும் இங்கு நடத்த இலங்கை அரசு விருப்பம் தெரிவித்திருந்தது. இலங்கையின் இந்தக் கோரிக்கையை 'சார்க்' தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஆங்கில எழுத்து வரிசைப் படி பத்தாவது 'சார்க்' உச்சி மாநாடு அடுத்த ஆண்டு நேபாளத்திலும் அதற்குப் பின்னர் பாகிஸ்தானிலுமே நடைபெற வேண்டும் என்பதே ஒழுங்காகும்.

ஆனால் இலங்கையின் கோரிக்கையை ஏற்றுக் கொழும்பில் 10 ஆவது மாநாட்டை நடத்த நேபாளமும், பாகிஸ்தானும் இணக்கம் தெரிவித்துவிட்டன.

இதேவேளை—

'சார்க்' நாடுகளின் 9 ஆவது உச்சிமாநாடு நேற்று மாலேயில் முடிவடைந்தது.

## தமிழ்த் திறன் போட்டிகள்

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான தமிழ்த்திறன் போட்டிகள் இன்றும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ-117)

## மிதிவெடியில் சிக்கியவர் மரணம்

ஆவரங்காலில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவமொன்றில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினமிரவு அங்கு மரணமானார்.

சின்னத்தம்பி இராசலிங்கம் (வயது 67) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-15)

### நாளை

**வைகாசி 2**

**வெள்ளிக்கிழமை**

திதி: நவமி
முற்பகல் 8.56 வரை.
நட்சத்திரம்: பூரம்
முன் இரவு 11.05 வரை.
சுபநேரம்: 5.53- 7.23
ராகுகாலம்: 10.23-11.53
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### சாயி சிந்தனை

ஒரு நிலப்பிரபு அடிவானம் வரையிலும் பரந்து கிடக்கும் வயல்களை தனக்குச் சொந்தமாக உடையவராக இருக்கலாம். ஆனால் அங்கு தூய்மையான ஓர் இடத்தில்தான் அவர் அமர விரும்புவார். அதைப் போல ஒரு பக்தனுடைய இதயத்தைக் கடவுள் தேர்ந்தெடுப்பதானது, மற்றவர்களுடைய இதயமெல்லாம் அவருடையது அல்ல என்று பொருளல்ல. அந்த இதயங்கள் தூய்மையாக இல்லை என்பதே அதனுடைய பொருள்.

கடவுள் ஒவ்வோர் இடத்திலும் இருக்கிறார். ஒவ்வொன்றும் அவருடையதுதான். அவருடைய நிலையான பார்வை எங்கும் உள்ளது.

ஆகையால் உங்கள் மேலும் கடவுளின் மேலும் முழு நம்பிக்கை கொள்ளுங்கள். நல்ல செயல்களிலும், பயனுள்ள நடவடிக்கைகளிலும் எப்பொழுதும் ஈடுபடுங்கள். உண்மையே பேசுங்கள். எண்ணத்தினாலோ, வார்த்தையினாலோ செயலினாலோ துன்பத்தைச் சுமத்தாதீர்கள். சாந்தியை அடைய அதுதான் வழியாகும்.

(ஆதாரம்: அவதார மொழி அமுதம்)

### இலங்கைக் கடற்படையினர்

## இந்தியப் படகு மீது மீண்டும் தாக்குதல்

புதுடில்லி, மே 15

தனுஷ்கோடிக்கு அப்பால் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் படகு ஒன்றின் மீது நேற்று முன்தினம் இலங்கைப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் அப்படகு முற்றிலும் சேதமடைந்தது என்றும் —

படகில் இருந்த மீனவர்கள் கடலில் குதித்து உயிர் தப்பினர் என்றும் — ஏஜென்ஸி செய்தியை மேற்கோள் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

ஏற்கனவே இலங்கை கடற்படையினர் இந்திய மீன்பிடிப்படகுகள் மீது நடத்திய தாக்குதலில் மூன்று இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-5)

## ஏ. ஆர். வி. தடுப்பூசி மந்திகையில் இல்லை

வடமராட்சி, மே 15

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் விசர் நாய்க் கடி நோய்க்கான தடுப்பு ஊசி (ஏ. ஆர். வி.) மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது,

இத்தடுப்பூசி மருந்து இன்மையால் இங்குவரும் நோயாளர் இங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மந்திகையில் ஒரே வீட்டில் நாயினால் கடியுண்ட 7 பேரும் இத்தடுப்பூசியைப்போட யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று திரும்பினர். (ஐ-173)

## 58 பேர் வந்தனர்

குருநகர், மே 15

வன்னியில் இருந்து கடந்த செவ்வாயன்றும் குடாக்கடல் ஊடாக 13 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேர் குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்தனர். (இ-51)

## பரீட்சைப் பெறுபேறுகள் எப்போது கிடைக்கும்?

1995 ஆம் ஆண்டு கல்வி கற்ற ஆண்டு ஐந்து மாணவர்கட்கு அவ்வேளையில் இங்கு இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக புலமைப் பரிசில் பரீட்சை எமது பிரதேசத்தில் நடைபெறவில்லை இவர்களுக்கென ஒரு விசேட பரீட்சை 1996 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

மிகுந்த இன்னல்களுக்கும், வசதிக்குறைவுகளுக்கும் மத்தியில் எங்கள் மாணவச் சிறார்கள் இப்புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தினர் என்பது எல்லோரும் அறிந்த விடயம். மாணவர்களின் அக்கறையைவிட பெற்றோரின் ஆவலும் எதிர்பார்ப்பும் அதிகமானது.

இத்தகைய கஷ்டங்களுக்கு மத்தியிலும் தம்மைத் தயார் செய்த மாணவ மழலைகள் பரீட்சைப் பெறுபேறுகள் இதுவரை கிடைக்காததால், நாடளாவிய ஒரு பொதுப் பரீட்சையில் தமது தகைமையைத் தீர்மானிக்க முடியாது உள்ளனர்.

எனவே இதில் ஆர்வமும், அக்கறையும் உடைய கல்விமான்கள் குறிப்பாக யாழ். மாவட்டக் கல்வி அதிகாரிகளும், வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு அதிகாரிகளும் மத்திய அரசின். அமைச்சர் அவர்களும் துரிதமாகச் செயற்பட்டு மேற்படி பரீட்சை முடிவுகளை வெளியிட்டு, பரீட்சையின் நோக்கங்கள் மாணவர்களுக்குக் கிடைக்க உதவுவார்களா?

ச. சிவராஜன்.

பண்ணாகம், சுழிபுரம்,

### வாசகர் திருமுகம்

கடந்த 1995ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ.சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய நெடுந்தீவுப் பகுதி பாடசாலை சார்பற்ற மாணவர்களின் பரீட்சை முடிவுகள் இன்னும் வந்து சேரவில்லை. இதனால் மாணவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது தவிர வருடாந்த ஜி. சீ ஈ சாதாரண தர பரீட்சைகளின் முடிவுகளும் கால தாமதமாகவே கிடைக்கின்றன. இதனால் புதிய வகுப்பிற்கு அதாவது உயர்தர வகுப்புக்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் காலம் வீணாகிறது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பாடத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையும் உள்ளது. இதன் காரணமாகவும் கல்வியில் மாணவர்களுக்கு இருக்கும் ஊக்கம் படிப்படியாகக் குறைந்து போகும் தன்மை நிலவுகிறது.

எத்தனையோ சவால்கள், கஷ்டங்களின் மத்தியில் கல்வியைக் கற்று அதற்கான இலக்கை அடைய முடியாமல் திண்டாடும் மாணவர்களின் அவல நிலையைக் கருத்திற்கொண்டு யாழ். கல்வி வட்டாரத்தில் இந்த விடயத்தில் அக்கறை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நெடுந்தீவு. கே. கிஜோமாஞ்.

## பதிவுத் தபால்கள் தாமதம்

சென்ற மார்கழி, தை மாதங்களில் கொழும்பில் சேர்க்கப்பட்ட குடாநாட்டுக்கான பதிவுத் தபால்கள் இங்கு வந்து சேரவில்லை என அறிகிறேன். எனக்குக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் சென்ற மாசியில் கொழும்பில் பதிவுத் தபாலில் சேர்க்கப்பட்ட காசோலை இன்னும் என்னிடம் வந்து சேரவில்லை, இது பற்றி வங்கியிலும் தபாற் கந்தோரிலும் விசாரித்த போது மேற்கண்ட தகவல் வெளியாயிற்று.

சாதாரண தபால்கள் நான்கு ஐந்து தினங்களில் வந்து சேருகின்றன. ஆனால் பெறுமதி மிக்க மிக அவசரமான பத்திரங்கள், காசோலைகள் மற்றும் ஆவணங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படும் போது ஐந்து மாதங்களாக அவற்றை இங்கு எடுத்து வராமல் இருப்பது மிக மிக வேதனைக்குரிய விடயம், பலருடைய பல முக்கிய விடயங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன.

தயவு செய்து இதில் கவனமெடுத்து ஆவன செய்யும்படி சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

கடவைப்புலம், சுன்னாகம். அ. பரமேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷெல்லுக்கு வயோதிபர் பலி

மட்டக்களப்பு, மே 15

மட்டக்களப்பு கிண்ணியடியில் ஒரு வீட்டின் மீது நேற்று மாலை 5-30 மணியளவில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் அவ்வீட்டில் இருந்த வயோதிபர் ஒருவர் இறந்தார்.

அவ்வீட்டில் இருந்த மற்றும் மூவர் காயமடைந்தனர். காயமடைந்தோர் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் — நேற்று மட்டக்களப்பு கும்புறுமுலைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் சிக்கிய பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

(இ-3-21)


பல்கலைக்சழக மாணவர்களுக்கான

## அவசர பொதுக்கூட்டம்

சில முக்கியமான விடயங்கள் குறித்து ஆராய வேண்டி இருப்பதால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் இன்று **15 - 05 - 97** வியாழன் பிற்பகல் 1.00 மணிக்கு **கைலாசபதி கலை அரங்கில்** ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

யாழ். பல்கலைக்கழகம்.

(46943)



## யாழ்ப்பாண மாநகரசபை

பொது மக்களுக்கு

## ஒரு வேண்டுகோள்

இராணுவ நடவடிக்கை மற்றும் இடப்பெயர்வு போன்ற காரணங்களால் அங்கத்தவர்களால் பொது சன நூலகத்திலும், கிளை நூலகங்களிலும் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி வாய்ந்த அதிக எண்ணிக்கையான நூல்கள் இதுவரை ஒப்படைக்கப்படாதமையாலும், மேற்படி நூலகங்களிலிருந்து அநேக நூல்கள் அகற்றப்பட்டு இருப்பதனாலும் எமது நூலக சேவை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபையின் நூலகங்களுக்குரிய நூல்களை வைத்திருப்போர் தாமதியாது அவற்றை ஒப்படைத்து உதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**வே. பொ. பாலசிங்கம்,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1997- 05- 14

(சி/722)



## நகரசபை, சாவகச்சேரி.

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் ''இக்ராட்'' இல். 3 மில்லியன் தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து 06 - 06 - 97 ஆம் திகதி முற்பகல் 10 - 00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே தினம் முற்பகல் 10-15 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

| வேலை விவரம் | வைப்புப்பணம் | படிவக்கட்டணம் |
|---|---|---|
| 1. இறைச்சிக்கடை திருத்த வேலை | 1000/- | 500/- |

மேற்படி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் சட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 03 - 06 - 97 ஆம் திகதி 12-30 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டா.

சித்திகர கேள்விக்காரர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**சி, நடராசா**
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
12 - 05 - 97

(சி-721)



## பிரதிகளுக்கு முந்துங்கள்

அண்மையில் வெளிவந்த
தென் இந்திய - தமிழ் - ஆங்கில வார, மாத சஞ்சிகைகள்
விற்பனையாகின்றன!
பிரதிகளுக்கு முந்துங்கள்! தேவைக்குப் பதிவு செய்யுங்கள்!

## ஸ்ரீலங்கா புத்தகசாலை

**234, கே. கே. எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(46948)


# யாழ். மாவட்டத்துக்கு யூரியா எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்

### அநுருத்த தலைமையில நேற்று நடந்த மாநாட்டில முடிவு

கொழும்பு, மே 15

யாழ். மாவட்டத்துக்கு யூரியா உரம் எடுத்துச்செல்ல அனுமதிப்பதென நேற்று கொழும்பில் நடந்த உயர் மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட சிவில்நிர்வாகம் குறித்து நேற்றுப்பாதுகாப்பு அமைச்சில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தலைமையில் இந்த மாநாடு நடந்தது.

இம் மாநாட்டில் தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா, வடக்கு மீள்குடியமர்வு அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர, யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் முப்படை தளபதிகள், பொலீஸ்மா அதிபர், சகல அமைச்சு செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் பல விடயங்கள் ஆராயப்பட்டன.

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு இராணுவ அதிகாரிகளின் மேற்பார்வையில் யூரியா உரம் வழங்குவதென இம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

உடனடியாக 500 மெற்றிக் தொன் யூரியா உரத்தை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோர், கைதானவர்கள் தொடர்பாக யாழ். அன்னையர் முன்னணி, கைதானோர், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் ஆகியன யாழ். செயலகத்தில் சமர்ப்பித்த மகஜர்களை யாழ். அரச அதிபர் இந்த மாநாட்டில் சமர்ப்பித்தார்.

காணாமற் போனோர், கைதானோர் தொடர்பாக விசாரணை செய்ப நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பே இது தொடர்பாக பதில் அளிக்க முடியும் என்று மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்)

றும் அவர் கூறினார்.

இராணுவ மற்றும் வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதாலேயே இந்த நடவடிக்கையை மாங்குளத்துடன் நிறுத்தக் கூடும் என்றும்—

இராணுவத்தினால் மாங்குளம் கைப்பற்றப்படுமானால் விடுதலைப்புலிகள் முல்லைத்தீவில் இருந்து மன்னாருக்குச் செல்லும் வழியைப் படையினரால் முற்றாகத் தடுக்க முடியும் என்றும்—

எனவே தான் இந்த இராணுவ நடவடிக்கையை மாங்குளத்துடன் நிறுத்தி பின்னர் மாங்குளத்தையும் கிளிநொச்சியையும் இணைப்பதற்கு பிறிதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

அவர் மேலும் கூறினார்.

''விடுதலைப் புலிகள் பலத்த எதிர்த் தாக்குதலை மேற்கொள்வதற்கு கனகராயன் குளத்தில் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தத் தாக்குதல் எவ்வளவு தாக்கமானது, அதை முறியடித்து இராணுவத்தால் தொடர்ந்து முன்னேற முடியுமா என்பது பற்றித் தற்போது கூற முடியாது'' என்றும் அவர் சொன்னார்.

(இ-10)

## பலத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

விமானங்களும், ஹெலிகளும் இதே பகுதிகளிலேயே தாக்குதல் நடத்தின.

நேற்றுக் காலை 5. 30 மணிக்கு வவுனியா விமானத் தளத்தில் இருந்து ஓமந்தைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த ஷெல் தாக்குதல்கள் நண்பகல் வரை நீடித்தன.

வேப்பங்குளம் முகாமிலிருந்து நேற்றுக் காலை ஆரம்பித்த ஷெல் தாக்குதல்கள் நேற்று மாலை வரை தொடர்ந்து நீடித்தன.

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு 30 அல்லது 40 கனரக வாகனங்களில் படையினரின் நகர்வு தென்பட்டது. வாகனங்களில் முள் கம்பிகளும் பெரும் அளவில் காணப்பட்டன.

படையினர் நேற்று முன்தினம் ஓமந்தையில் புலிகளின் 'பாஸ்' வழங்கும் அலுவலகத்தில் காணப்பட்டதாகவும் நேற்று ஓமந்தைப் பாடசாலைக்கு வந்ததாகவும் தகவல் ஒன்று தெரிவித்தது.

காயம் அடையும் படையினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கே எடுத்துச் செல்லப் படுகின்றனர்.

எனினும் நேற்று முதல் வவுனியா ஆஸ்பத்திரியில் இரண்டாம் வார்ட் படையினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-3-10-21-164)

## சந்திரிகா - குஜ்ரால் நேற்றுச் சந்தித்தனர்

கொழும்பு, மே 15

மாலைதீவில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ராலும் சந்தித்து இருதரப்பு உறவு பற்றிப் பேசினர்.

இருவரும் பேசிய விடயங்கள் வெளியாகவில்லை.

(இ-

## தற்கொலைப் படையினர் கொழும்புக்குள் ஊடுருவல்

### தேடுதல் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, மே 15

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த பத்துப் பேர் கொழும்பு நகருக்குள் ஊடுருவி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச்சேர்ந்த ஐந்து ஆண் போராளிகளும் ஐந்து பெண் போராளிகளும் கொழும்புக்குள் ஊடுருவியதாகக் கிடைத்த தகவலையடுத்து அவர்களைக் கைது செய்வதற்காக பொலீஸார் பல இடங்களில் தேடுதல் நடத்தி வருவதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் டி. எம். பி. டி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக சந்தேகிக்கப்படும் தற்கொலைப்படைப் போராளிகளில் தியாகராஜா, தேவிகா, கௌரவி, செனெக், குமுதா ஆகியோரும் அடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## 'ராடர்' நிலையம்...

(முதலாம் பக்கத் தொடர்)

றும் — அரச தரப்புச் செய்திகள் தெரிவித் தன.

மோதல் இடம்பெற்ற பகுதியில் இருதடவைகள் ஹெலி இறங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான படையினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

மோதலின் போது இடம் பெற்ற ஷெல் மற்றும் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களால் வேலணைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இந்தச் சத்தங்கள் யாழ். நகரிலும் கேட்டன.

இ-3-15-111)

## இளவாலையில் மிதிவெடி

இளவாலையில் நேற்று அதிகாலை 4 மணிக்கு இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் இளைஞன் ஒருவர் வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

சீவல் தொழிலாளியான இவர் அதிகாலை மரம் சீவுவதற்காகச் சென்ற வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் இளவாலையைச் சேர்ந்த செல்லத்துரை ரவீந்திரன் (வயது 22) என்பவரே கால் துண்டிக்கப்பட்டவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## சதுரங்கபோட்டி இன்று நடக்கும்

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியினதும் யாழ். லயன்ஸ் கழகத்தினதும் ஆதரவுடன் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்தும் பாடசாலை அணிகளுக்கிடையிலான வருடாந்த சதுரங்கப் போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகும்.

எதிர் வரும் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு பரிசளிப்பு விழா வெகு சிறப்பாக நடத்தப்படவிருக்கிறது.


## OBITUARY

**RASIAH PUVANENDRA**
(Rtd. Agricultural Instructor)

Beloved husband of Shanthi passed away on 13 05-1997 and the funeral took place in Colombo on 14-05-1997.

**D. Gnanaseelan**
(Brother in Law)

122, Second Cross Street,
Jaffna.

(46944)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org